©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 380A] சென்னை, வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 27, 2021
ஆவணி 11, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண் 21/2021—தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டம் .. .. .. .. 2-3

எண் 22/2021— பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் .. .. .. 5-7

2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27– ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130– ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2021**

**1955 – ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின் வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், **2021**–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

I ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

**2. 1955**–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு சட்டத்தில், I ஆம் இணைப்புப்பட்டியலில், அதன் **(1)** ஆம் வரிசையில் 7 ஆம் உறுப்பிற்கெதிராக **(2)** மற்றும் **(3)** ஆம் வரிசைகளில் உள்ள பதிவுகளுக்காக, பின்வரும் பதிவுகளானது, முறையே, மாற்றாக அமைப்படுதல் வேண்டும், அதாவது :– (தமிழ்நாடு சட்டம் XIV/**1955**)

| | |
|---|---|
| "1925–ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் சான்று | இருபத்தைந்தாயிரம் ரூபாய் என்ற மேல்வரை ஒன்றுக்குட்பட்டு, வாரிசுரிமைச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் கடனீடு அல்லது கடன்கள் மற்றும் கடனீடுகளின் மொத்தத்தொகை அல்லது மதிப்பின் மீது மூன்று விழுக்காடு". |

**நோக்கக்காரண விளக்கவுரை**

ஓய்வுபெற்ற நீதிபதி. K. சம்பத் அவர்களின் தலைமையின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பிறவற்றிற்கிடையில், மெய்ப்பிப்புச் சான்று அல்லது ஆட்சியுரிமையாவணத்திற்கான நீதிமன்றக்கட்டணங்களானது, 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 6/2017) 1955—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XIV/1955) திருத்தம் செய்ததன் மூலம் ரூபாய் இருபத்தைந்தாயிரம் என்ற மேல்வரைக்குட்பட்டு மெய்ப்பிப்புச் சான்று அல்லது ஆட்சியுரிமையாவணத்தின் வழங்குகை செய்யப்பட்டது தொடர்பான சொத்தின் தொகை அல்லது மதிப்பின் மீது மூன்று விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயிலின் மெய்ப்பிப்புச் சான்றினைப் பொறுத்த நேர்வில் உருவாக்கப்பட்டுள்ளவாறு, நீதிமன்றத்தில் வாரிசுரிமைச் சான்றுக்காக விண்ணப்பிப்பதற்கான நீதிமன்றக்கட்டணத்தைத் திருத்துவதற்காக நீதிப்பேராணை மனு மற்றும் அசல் மனுவானது சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மெய்ப்பிப்புச் சான்று மற்றும் வாரிசுரிமைச் சான்று ஆகிய இரண்டும் ஒரே நிலையில் இருப்பதனால், உயிலின் மெய்ப்பிப்புச் சான்று அல்லது ஆட்சியுரிமையாவணத்திற்காக விதிக்கப்படும் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு வாரிசுரிமைச் சான்றுக்கான கட்டணத்தைத் திருத்துவதற்காக, 1955—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் ஒஐஏ/1955) ஐ ஆம் இணைப்புப்பட்டியலில் 7 ஆம் உறுப்பினை திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ். ரகுபதி**,
*சட்டத்துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021** ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் **27** ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130** ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2021.**

**1908-ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில், மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாவது ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021-ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக, குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XVI/1908.

32-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1908-ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டமெனக் குறிப்பிடப்படுவதான) 32-ஆம் பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"*வரம்புரையாக,* மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, மின்னணு முறைகள் மூலம் முன்னிலைப்படுத்தப்படலாகும் அத்தகைய ஆவணங்களைக் குறித்திடும்".

32-Aஎனும் பிரிவினை மாற்றியமைத்தல்

3. முதன்மைச் சட்டத்தின் 32-A பிரிவிற்கு பதிலாக, பின்வரும் பிரிவுகள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:

"32-A. மின்னணு முறையிலான பதிவு.- ஆவணமானது மின்னணு முறை வாயிலாக பதிவுக்காக தாக்கல் செய்யப்படும் நேர்வில், அதனை தாக்கல் செய்வதற்கான வழிமுறை, ஏற்புக்காக வருகை தருதல், மேலெழுத்துக்கள், கையொப்பம் மற்றும் முத்திரையிடுதலுக்கான முறை, பதிவுக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவதற்கான வழிமுறை மற்றும் அத்தகைய பிற செயல்முறைகளானவை, இதன் பொருட்டு உருவாக்கப்பட்ட விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

32-AA. புகைப்படத்தை கட்டாயமாக இணைத்தல் போன்றவை.- முறையான பதிவு அலுவலகத்தில் ஒவ்வொரு நபரும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யும் நிகழ்வில், பிரிவு 32 -ன் கீழ் தனது கடவுச் சீட்டளவு புகைப்படம் மற்றும் விரல்ரேகையினை ஆவணத்தில் பதித்தல் வேண்டும்:

**வரம்புரை:** அசையா சொத்தின் உரிமை மாற்றம் தொடர்புடைய அத்தகைய ஆவணத்தில் அத்தகைய சொத்தின் வாங்குபவர் மற்றும் விற்பவர் ஒவ்வொருவரின் கடவுச்சீட்டளவு புகைப்படம் மற்றும் விரல்ரேகை குறிப்பிடப்பட்ட ஆவணத்தில் பதிக்கப்படுதல் வேண்டும்.".

52-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 52-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் கூறு (a)-ல், "32A-ஆம் பிரிவின் கீழ்" எனும் சொற்றொடருக்கு பதிலாக, "32-AA-ஆம் பிரிவின் கீழ்" எனும் சொற்றொடரானது மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

69-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 69-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவில், (gg) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"(ggg) ஆவணமானது மின்னணு முறை வாயிலாக பதிவுக்காக தாக்கல் செய்யப்படும் நேர்வில், ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான வழிமுறை, ஏற்புக்காக வருகை தருதல், மேலெழுத்துக்கள், கையொப்பம் மற்றும் முத்திரையிடுதலுக்கான முறை, பதிவுக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவதற்கான வழிமுறை மற்றும் அத்தகைய பிற செயல்முறைகளுக்கான நடைமுறையை ஒழுங்குபடுத்துதல்".

**நோக்க-காரண விளக்கவுரை**

1908-ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மையச் சட்டம் XVI/1908) 17-ஆம் பிரிவின் படி, உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கை ஆவணங்களுக்கான பதிவு செய்தலானது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வங்கிகளிடமிருந்து தொழிற் கடன்கள்பெறுவதற்காக, உரிமை ஆவணங்களின் ஒப்படைப்ப தொடர்பான உடன்படிக்கை ஆவணங்களை தொடர்புடைய சார்பதிவாளர் முன்பு பதிவு செய்வதற்காக நேரில் ஆஜராகி முன்னிலைப்படுத்துவதில் தொழிற்துறையானது மிகுந்த இடர்பாட்டை எதிர்கொள்கிறது. மாநில அரசானது, மத்திய அரசு அறிவித்த ஊக்கத் திட்டங்களை பயன்படுத்தி, குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறைக்கு புத்துயிரூட்டுதலை முழுமையான வகையில் ஊக்குவிக்கிறது. உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கைகள் போன்ற அத்தகைய ஆவணங்களை பதிவு செய்வதற்காக நேரில் ஆஜராகி முன்னிலைப்படுத்துவதற்கான தேவையை விட்டொழிப்பது, தொழில் செய்வதைஎளிதாக்க உதவுகின்றது. எனவே, 1908-ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தினை (மையச் சட்டம் XVI/1908) அதன் பொருட்டு தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.